2018 மே 30]

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், மகாராஜபுரம் மக்கள்தொகை நிறைந்த பகுதியாகும். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, எப்போதுமே மக்கள் நலன்மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ள அரசாகும். சுகாதாரத் துறையிலே சிறந்து விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மகாராஜபுரத்தில் ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க உதவிடுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைரீதியாக உடனடியாக ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

86—

அலுவலகத்திற்குக் கட்டடம்

***3764—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, மாதவரம் சார்-பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வடசென்னை பதிவு மாவட்டத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் மாதவரம் சார்-பதிவாளர்

அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதற்கு சொந்தக் கட்டடம் கட்ட, கோரிக்கைகள் வரப்பெற்றதன் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாதவரம் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு அருகிலுள்ள திருவொற்றியூர் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்ட நிலம் இல்லாததால், திருவொற்றியூர் மற்றும் மாதவரம் சார்— பதிவாளர் அலுவலகங்களை இணைத்து, ஒருங்கிணைந்த கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரை வணங்குகிறேன். மக்களாட்சி தத்துவத்திற்கு உதாரணம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு. அன்பு, அறிவு, துணிவு ஆகிய நற்பண்புகளோடு ஆட்சி புரிந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவரது வழித்தோன்றலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய நல்லரசு, தமிழ்நாட்டு மக்களுடைய கோரிக்கைகளை நூற்றுக்கு நூறு சதவிகிதம் நிறைவேற்றி, நாட்டு மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றிருக்கிறது. அந்த வகையில், நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதி, திருத்தணி நகரத்தில் பழைய கட்டடத்தில் இயங்கிவரும் சார்-பதிவாளர் அலுவலகம் பொது மக்களுக்கு இடையூறாக உள்ளது. இதற்கு மாற்றாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு திருத்தணியில் சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்,*

2018 மே 30]

திருத்தணி நகரத்தில் நகர மத்தியிலே அமைந்திருக்கக்கூடிய சார்-பதிவாளர் அலுவலகத்தினை பதிவாளர்களுக்கு இடையூறு இல்லாமல் மாற்றியமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில், நிதிநிலைமைக்கேற்ப புதிய கட்டடம் கட்ட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனதைவிட்டு மறையாமல் நீக்கமற நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவைப் போற்றி வணங்கி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லரசை தலைமையேற்று வழிநடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாட்சிமை பொருந்திய அண்ணார் எடப்பாடியார் அவர்களையும், அவர்களுக்கு உறுதுணையாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணார் ஓ.பி.எஸ். அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

சேலம் தெற்கு தொகுதி, நகர மக்கள் மட்டுமல்லாமல், கிராமப்புற மக்களும் வந்து செல்கின்ற ஓர் இன்றியமையாத பகுதியாக இருக்கின்றது. இத்தொகுதி, மனை நில விற்பனை மற்றும் விவசாய நில விற்பனையுடன், வியாபாரம் செய்யக்கூடிய ஒப்பந்ததாரர்களெல்லாம் பதிவு செய்யக்கூடிய சூழ்நிலை இருந்துவரக்கூடிய வளர்ச்சி பெற்ற தொகுதியாக இருக்கின்றது. மனை நில விற்பனையில் இருந்த தேக்க நிலைமைகளையெல்லாம் மாற்றி, தங்களுடைய சீரிய சிந்தனைகள்மூலம் இன்றையதினம் வணிக வரித் துறையில் ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் ஆகியோர், பத்திரப் பதிவு அலுவலகங்களெல்லாம் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற இந்த நல்லதொரு சூழ்நிலையில், சேலம் தெற்கு தொகுதியில் இயங்கி வருகின்ற அம்மாபேட்டை சார்-பதிவாளர் அலுவலகமும், கொண்டலாம்பட்டி சார்-பதிவாளர் அலுவலகமும் சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு ஏதுவாக,

அவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒரு கொள்கை முடிவினை எடுத்திருக்கிறது. அனைத்து அலுவலகங்களும் அரசுக் கட்டடத்தில் இயங்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு புதிய புதிய கட்டடங்களைக் கட்டி பத்திரப் பதிவுத் துறைக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. அரசுக்குத் தேவையான நிதியை, அதிகமாகப் பெற்றுக் கொடுக்கக்கூடிய துறையாக, கிட்டத்தட்ட 80 ஆயிரம் கோடி ரூபாய், 90 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் வருவாயினைப் பெற்றுத் தரக்கூடிய துறையாக வணிக வரித் துறை இருக்கின்றது. ஆகவே, இவர்கள் கேட்கக்கூடிய இடங்களுக்கெல்லாம் தாராளமாக கட்டடங்களைக் கட்டி வழங்குவார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் இன்றைக்கு நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இங்கே உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்புகின்றார்கள்.*

முற்பகல் 10-45

ஆனால், நம்முடைய நிதித் துறையானது இவ்வளவு தொகைதான் செலவிட வேண்டும் என்று எங்களுக்கு கட்டுப்பாடு விதித்திருக்கின்றது. இருக்கக்கூடிய துறைகளிலேயே அதிகமான நிதியை அரசுக்கு ஈட்டித் தரக்கூடிய துறையாக எங்களது துறை இருந்தாலும்கூட, சிக்கனமாக, யாருமே செய்யாத அளவுக்கு, மற்ற துறைகளைப் பார்க்கும்போது குறைந்த செலவினத்திலே நாங்கள் இன்றைக்குத் துறையை வழிநடத்திக் கொண்டிருக்கின்றோம். அந்த அடிப்படையிலே வருடத்திற்கு 10 கட்டடங்கள்தான் புதிதாகக் கட்டுவதற்கு நிதித் துறை எங்களுக்கு உத்தரவு வழங்கியிருக்கின்றது. ஆகவே, நிதி அமைச்சரை நாடி, நிதி அமைச்சரிடம் கூடுதலாக கட்டடங்கள் கட்ட உத்தரவு பெற்றுத் தரும்போது செய்ய இயலும். 40—லிருந்து 45 அலுவலகங்கள் இன்னும் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

2018 மே 30]

நிதித் துறையிலிருந்து உத்தரவு பெறுவது என்பது சாதாரணமான வேலையல்ல. ஆகவே, இன்றைக்கு நம்முடைய உறுப்பினர்கள் குறிப்பிடுகின்ற எல்லாத் தொகுதிகளிலும் சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று அவர்களுடைய கோரிக்கைகள் இருந்தாலும், அதுகுறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் விளக்கமாக எடுத்துச்சொல்லி, தேவையான புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு துறை முன்வரும் என்பதனைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அவர் கண்ட கனவை நனவாக்கும் விதமாக சீரோடும் சிறப்போடும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், அவருக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திலே வளர்ந்து வரும் பகுதியிலே, மொடக்குறிச்சி ஒன்றியமும் ஒன்று. மொடக்குறிச்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியிலே அவல்பூந்துறை சார்-பதிவாளர் அலுவலகத்தில் தினந்தோறும் நூற்றுக்கணக்கான பதிவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கூட்ட நெரிசல் காரணமாக கிரையம் செய்வதற்கு தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, புதியதாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டு, இன்றைக்குச் சீரோடும், சிறப்போடும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற மொடக்குறிச்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மொடக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு அவல்பூந்துறை பகுதியை இரண்டாகப் பிரித்து, மொடக்குறிச்சியில் ஒரு சார்-பதிவாளர் அலுவலகம் அமைய ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய சார்-பதிவாளர் அலுவலகம் கேட்டிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில், நம்முடைய தமிழகத்தில் மட்டும்தான் கிட்டத்தட்ட 575 சார்-பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. பெரிய மாநிலங்களாகக் கருதப்படுகிற மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில்கூட 300, 325, 350 என்ற அளவில்தான் சார்—பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. ஆகவே, எதிர்வரும் காலங்களில் புதியதாக சார்—பதிவாளர் அலுவலகங்கள் தொடங்கக் கூடாது என்கின்ற ஒரு கொள்கை முடிவு அரசால் எடுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

கூட்டுறவுச் சங்கக் கட்டடம்

***7366—திரு. ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்காப் புகழ் பெற்ற மங்கையர்க்கரசி*